அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 27 /2017
தேதி: 07.03.2017

## இலங்கை கடற்படையினர் தாக்குதல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

இலங்கை கடற்படையினரின் துப்பாக்கிச்சூடு வன்முறை மீனவர் பிரிட்சோவின் உயிரை பறித்திருக்கிறது. இது போன்ற கொடுமைகளுக்கு இலங்கை அரசு தமிழர்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். மத்திய மாநில அரசாங்கங்கள், பிரிட்சோவின் குடும்பத்திற்கு உரிய இழப்பு தொகை உடனடியாக அளித்திடவேண்டும்.

நீண்டகால அரசியலையும் அதன் பொருட்டு இருக்கும் சிக்கல்களையும் தீர்த்து தார்மீக அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலும் இரு நாட்டின் அரசாங்கமும் மீனவர் உயிர் இழப்பையும், உடைமை இழப்பையும் உடனடியாக தடுத்து நிறுத்தி நிரந்தர தீர்வு காண வேண்டும்.

உயிரிழந்த மீனவர் குடும்பத்திற்கு என் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் காயமடைந்த சரவணன் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்